**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**O.S.No.303/2022**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கன்னியம்மாள் |
| தகப்பனார் / கணவர் | .. | ராமகிருஷ்ணன் |
| வயது | .. | 36 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் திங்கட்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வழக்கில் வாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 22.07.2002 தேதியிட்ட பாலசுந்தரம், ரவிமூர்த்தி என்பவரிடம் கிரையம் பெற்ற கிரையப் பத்திர நகல் வா.சா.ஆ.1, 12.07.2013 தேதியிட்ட பாலசுந்தரம் அவரது மகனான ராமகிருஷ்ணனுக்கு ஏற்படுத்திக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திர நகல் வா.சா.ஆ.2, 11.07.2016 தேதியிட்ட வாதியின் மாமனார் பாலசுந்தரம் என்பவர் திருத்தம் செய்ய வேண்டி 3ம் பிரதிவாதிக்கு

மனு கொடுத்து அதனை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சீட்டு நகல் வா.சா.ஆ.3, 25.07.2016 தேதியிட்ட வாதியின் மாமனார் பாலசுந்தரம் என்பவர் திருத்தம் செய்ய வேண்டி 3ம் பிரதிவாதிக்கு மனு கொடுத்து அதனை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சீட்டு நகல் வா.சா.ஆ.4, பாலசுந்தரம் என்பவர் கொடுத்த மனுவின்மீது நடவடிக்கை எடுக்க கோரி 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு கடிதம் நகல் வா.சா.ஆ.5, 13.07.2018 தேதியிட்ட வாதியின் மாமனார் பாலசுந்தரம் என்பவர் திருத்தம் செய்ய வேண்டி 2ம் பிரதிவாதிக்கு கொடுத்து சலான் கட்டியுள்ளார், மேற்படி சலான் நகல் வா.சா.ஆ.6, 10.07.2022 தேதியில் வாதி 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.7, வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.8, வாதியின் கணவர் ராமகிருஷ்ணன் என்பவர் 17.02.2017 தேதியில் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.9, 08.07.2017 தேதியிட்ட இறந்தவிட்ட ராமகிருஷ்ணன் என்பவரின் வாரிசு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.10, நத்தம் நிலவரித் திட்ட தூய சிட்ட பட்டா எண்.25 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.